செ.வெ.எண் : 23/ஜனவரி நாள்: 14.01.2016

**இராமநாதபுரம் மாவட்டத்தில் கிராம ஊராட்சி அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தொடங்கப்படவுள்ளது**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 11 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 429 கிராம ஊராட்சிகள் உள்ளது. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ரூ.20,000/- செலவினத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கிராம ஊராட்சி விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது. கிராமங்களிலுள்ள திறமையானவர்களை ஊக்குவிக்கவும், தமிழக அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற விளையாட்டு, பள்ளி மற்றும் விளையாட்டு விடுதிகளில், கிராமங்களில் உள்ள திறமையான மாணவ, மாணவியர்களை கண்டறிந்து சேர்க்கவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்போட்டிகள் 18.01.2016 முதல் 20.02.2016 வரை நடைபெறவுள்ளது. போட்டிகளில் கலந்து கொள்ள வயது வரம்பு இல்லை. ஆண், பெண் இருபாலருக்கும் போட்டிகள் தனித்தனியே நடத்தப்படவுள்ளது. அந்தந்த கிராம ஊராட்சிகளில் உள்ளவர்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிலேயே போட்டிகளில் பங்கேற்க வேண்டும். ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் மூன்று நாட்கள் போட்டிகள் நடைபெறும்.

**தடகளப் போட்டிகள் (ஆண் / பெண் இருபாலருக்கும்)**

100 மீ ஓட்டம், 200 மீ ஓட்டம், 400 மீ ஓட்டம், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், வட்டு எறிதல் 6 போட்டிகள் x 2 (ஆண் மற்றும் பெண்) x முதல் மூன்று இடங்கள் = 36

**குழுப்போட்டிகள்**

கையுந்து பந்து போட்டியில் ஒரு குழுவில் 12 பேர் கலந்து கொள்ளலாம். 12 x 2 (ஆண் பெண் அணிகள்) x முதல் மூன்று இடங்கள் = 72

கபாடி போட்டியில் ஒரு குழுவில் 12 பேர் கலந்து கொள்ளலாம்.

12 x 2 (ஆண் பெண் அணிகள்) x முதல் மூன்று இடங்கள் = 72

கால்பந்து போட்டியில் ஒரு குழுவில் 16 பேர் கலந்து கொள்ளலாம். 16 (ஆண்கள் மட்டும்) x முதல் மூன்று இடங்கள் = 48

**மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டிகள்**

மேற்கண்ட விளையாட்டுப் போட்டிகளில் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொள்ளும் வகையில் இரு போட்டிகள் நடத்தப்பட வேண்டும். இதற்கு இரண்டு போட்டிகள் x 2 (ஆண் பெண்) x முதல் மூன்று இடங்கள் = 12 ஒவ்வொரு போட்டியிலும் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

(36 + 72 +72 + 48 + 12) = 240

போட்டியில் பங்கேற்க விரும்புவர்கள் முதல் நாள் சம்பந்தப்பட்ட ஊராட்சி அலுவலகத்தில் பெயர்களை பதிவு செய்ய வேண்டும். இரண்டாம் நாள் குழுப் போட்டிகள் நடத்தப்படும். மூன்றாவது நாள் தடகளப் போட்டிகளும், பரிசளிப்பும் நடைபெறும். நகரப் பஞ்சாயத்து மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த பணியாளர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து கிராம ஊராட்சிகளில் உள்ள பொதுமக்கள் அதிகளவில் போட்டிகளில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு அலுவலர்(74017 03509) என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**